REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 26உ வெள்ளி (8—2—57) ★ ★ வெளியூர்: தை 27உ சனி (9—2—57) [இதழ் 208

ரூ. 10,000 பரிசு அளிப்பார்களாம்!

அணுசக்தி உற்பத்திக்கு மூலப் பொருள் யுரேனியம் கனிப் பொருள்கள் உள்ள இடத்தைப் புதிதாகக்கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு இந்திய சர்க்கார் அணுசக்தி இலாகா ரூ. 10,000 வரையில் பரிசு அளிப்பதாக அறிவித்திருக்கிறது. இப்பொழுது யுரேனியம் கிடைக்கும் இடத்திலிருந்து புதிதாக யுரேனியம் கிடைக்கக்கூடிய இடம் குறைந்தது 50 மைல்களுக்கு அப்பால் இருக்கவேண்டுமாம். அத்துடன் அங்கு குறைந்தபட்சம் 50டன் யுரேனியம் ஆக்சைட் எடுக்கக்கூடியவிதத்தில் கனிவளமும் இருக்கவேண்டுமாம்.

மாநிலங்களுக்கு சுயஆட்சி வழங்குக!

மத்திய சர்க்காரின் 'கருணை'யால் மாநிலங்கள் இயங்கவேண்டியுள்ளது

முகம்மது ஹட்டா யோசனை

கிளர்ச்சியை ஒடுக்கக் குடியரசுத் தலைவருக்கு தனி அதிகாரமாம்!

ஜகார்தா, பிப். 7—

"எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தேவையானால் அவசரச் சட்டம் ஒன்று இயற்றுவதின் மூலம், மாகாண சர்க்கார்களுக்கும் வட்டார நிர்வாக அமைப்புகளுக்கும் சுய ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டாக வேண்டும்.

"இப்படி, உடனடியாகத் தரப்படுகின்ற இந்தச் சுய ஆட்சி அதிகாரம், அந்தந்த நிர்வாக அமைப்புகளுக்கு அதிகமதிகமான அளவில் பொறுப்புணர்ச்சியை ஊட்டுவதாக அமைந்திருக்கும் என நான் நம்புகிறேன்.

"இன்றுள்ள நிலைமையில் ஒவ்வொரு வட்டார நிர்வாக அமைப்பும், மத்திய சர்க்காரின் கருணைகடாட்சத்தால் தான் இயங்க வேண்டியிருக்கிறது.

—இவ்வாறு இந்தோனேஷியாவின் முன்னாள் துணைத் தலைவரான டாக்டர் ஹட்டா, மாநிலங்களுக்குச் சுய ஆட்சி உரிமை வழங்குவதில், இப்போதைய தலைவர் சுகர்ணோவுக்கு முழு அதிகாரம் அளிக்க இந்தோனேஷியப் பாராளுமன்றம் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, பாண்டுங்கில் உள்ள பத்திரிகை ஒன்றிற்கு எழுத்து மூலம் அனுப்பியுள்ள ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இப்போதிருக்கிற பெரும் பிரச்சினைகளையெல்லாம் சுமூகமான முறையில் தீர்ப்பதற்கான ஒரே ஒரு சிறந்த வழி, குடியரசுத் தலைவரான டாக்டர் சுகர்ணோ, தமது தலைமைக்குக் கட்டுப்பட்ட மந்திரி சபை ஒன்று அமைத்து சர்க்காரை இயக்குவதுதான்"

என்றும் டாக்டர் ஹட்டா அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"மிகவும் அதிகார பலம் பொருந்திய மத்திய அமைப்பு தவறு செய்கிறது என்பதற்கான அடையாளம் தான், அந்த மத்திய அமைப்பிலிருந்து விடுபட இந்தோனேஷியாவில் அடங்கிய மாநிலங்களில் அண்மையில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள்"

என்றும் டாக்டர் ஹட்டா எடுத்துக் கூறியிருக்கிறார்.

"உள்விவகாரத் துறைகளில் முழு அதிகாரமும் கொண்டு, எல்லா மாநிலங்களும் ஒரே மத்திய அமைப்பின் கீழ் இருப்பது என்ற பெடரல் அமைப்புத் தத்துவத்தை ஏற்று, அதன்படி நாம ஒரு இணைப்பு சர்க்கார் ஏற்படுத்தியிருந்தோம். இந்த இணைப்பு அரசு முறை ஏற்பாடு, அந்தந்த மாநில அதிகாரத்துறை அனைத்தும் அந்தந்த மாநிலத்திலேயே அமையப் பெற்றிருக்கும் என்பதை உறுதி கூறும் சாசனம் ஒன்றை அடிப்படையாகக்கொண்டே ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று காணப்படுகிற நிலையோ, தேவையில்லாத இடங்களில்கூட, மத்திய ஆட்சி அமைப்பு, ஆழமாகத் தனது பிடியை — ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டு வருகிறது,"

என்றும் டாக்டர் ஹட்டா சுட்டிக் காட்டியிருக்கிறார்.

★★★★★★-★★★★★★★-★★★★

அறிவிப்பு

★

9—2—57 சனி (வெளியூர் 10—2—57) 'நம்நாடு' இதழில் சென்னை சட்டசபை, பாராளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர்கள், கழக ஆதரவு பெற்ற அபேட்சகர்களின் முழுப் பட்டியலும் வெளியிடப்படும்.

★★★★★★★★★-★★★★-★★★★

ஊனமடைந்தவர்கள் மீது திடீரென அக்கரை!

புதுடில்லி, பிப். 7—

ஊனமடைந்தவர்களுக்கு உதவிச் சம்பளங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் ஊனமடைந்த சிறுவர்களும், வயது வந்தவர்களும் கல்வி கற்கவும், தொழில் அறிவு பெறவும் உதவிச் சம்பளமளிப்பதற்கு இந்தியப் பேரரசு ஏற்பாடு செய்திருக்கிறதாம்.

சென்னை பால் விநியோகத் திட்டத்திற்கு உதவி

சென்னை பால் விநியோகத் திட்டத்திற்கு உதவியளிக்க, டில்லி வந்திருக்கும் நியூசிலாந்து தூதுக் குழு சம்மதம் அளித்திருப்பதாகத் தெரிகிறது.

பிரம்மச்சாரிகளின் நிலை பற்றி கிண்டல்?

காங்கிரஸ் தலைவரின் உதாரணம்

வாரங்கல், பிப். 7—

"தெலிங்கானாவில் கம்யூனிஸ்டு பிரஜா-சோஷலிஸ்டு கட்சிகளின் தேர்தல் ஒப்பந்தம், மணமகளைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையில் ஒரு பிரம்மச்சாரி இன்னொரு பிரம்மச்சாரியின் உதவியை நாடிய கதைபோல் இருக்கிறது" என்று, காங்கிரஸ் தலைவர் தேபர் கூறியிருக்கிறார்.

'திரிசங்கு' நிலையிலா பி. சோ. கட்சி?

நேரு பண்டிதர் வர்ணனை?

இலட்சுமணபுரி, பிப். 7—

இங்கு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய நேரு, பிரஜா-சோஷலிஸ்டு கட்சி ஒரு விசித்திரமான நிலைமையில் இருக்கிறதென்றும், திரிசங்குவைப் போல சுவர்க்கத்திலுமில்லாமல், பூமியிலும் இல்லாமல் அந்தரத்தில் அக்கட்சி இருக்கிறது என்றும் கூறியுள்ளார்.

★★★

தி. மு. கழக வரலாற்றில் முக்கிய கட்டம்

10—2—57 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

[கே. வி. கே. சாமி அரங்கில்]

தி. மு. க.—தேர்தல் பிரச்சார

சிறப்பு மாநாடு

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமை தாங்குவார்.

அண்ணா அவர்களும் . . . கழகச் சொற்பொழிவாளர்களும் கருத்துரை வழங்குவர்

தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை (Election Manifesto) மாநாட்டில் பிரகடனப்படுத்தப்படும்.

பிற்பகல் 2-மணியிலிருந்து:

★

ஓவியக் காட்சிகள், எம். எம். முருகேசன் குழுவினர், வி. கே. சாமி உடற்பயிற்சிக் கழகத்தினர் ஆகியோரின் நிகழ்ச்சிகளும், டி. செயசுந்தரம் குழுவினரின்—'தேர்தலில் நாம்' என்ற கதா காலட்சேப நிகழ்ச்சியும், நாடகமும் நடைபெறும்.

★

நுழைவுக் கட்டணம் அணா 4. தாய்மார்களுக்கு மட்டும் இலவசம்

நாட்டுக்கு நல்லாட்சி வருக்க—தி. மு. கழகத் தேர்தல் பணிக்குப் பேராதரவு தரத் திரண்டு வாரீர்!

★

ஊர்வலம்:

காலை 7½ மணிக்கு இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று மாநாட்டுத் திடலை அடையும். கழக அபேட்சகர்களும், முன்னணி வீரர்களும் ஊர்வலத்தில் கலந்து கொள்வர்.

கழகத் தோழர்களே! தொழிலாளர்களே! திராவிடப் பெருங்குடி மக்களே!

திரளாக வாரீர்!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★-★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8—2—'57 வெள்ளி

வெண்ணெய் இருக்கிறது!

தொழில்கள் அனைத்திலும் தலைசிறந்துள்ளவை கனரகத் தொழில்கள். கனரகத் தொழில்கள் அனைத்திலும் முதன்மையாகவும் மூலமாகவும் இருப்பது உருக்குத் தொழில்.

உருக்குத் தொழிலுக்கு மூலப் பொருட்களாகத் தேவைப்படும் இரண்டு பொருட்களில் இரும்புக் கனிப்பொருள் இன்றியமையாததாகும். இரும்புக் கனிப்பொருள்—அதிலும் முதல்தரமானது-தென்னகத்தில் நிரம்ப இருக்கிறது எனத் திட்டவட்டமாகத் தெரிந்த பிறகும்கூட, ஒரு உருக்குத்தொழிற்சாலையை உடனடியாகத் துவங்க முடியாத நிலை இங்கு இருந்து வருகிறது.

குறிப்பிட்ட தொழிலுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்கள் அனைத்தும் ஒரு இடத்திலேயே குவிந்திருந்தால்தான், அங்கு அதற்குரிய தொழிற்சாலையைத் துவங்க முடியும் என்ற தொழில் துறை ஏற்பாடு, சென்ற நூற்றாண்டின் மத்தியில் தவிடுபொடியாக்கப் பட்டுவிட்டது. இரும்புக்கனிப் பொருளையும், துருப்பிடித்த இரும்புப் பொருட்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தும், அவைகளை உருக்குவதற்குத் தேவையான நிலக்கரியையும் பிறநாட்டிலிருந்து இறக்குமதி செய்தும், தனது உருக்குத் தொழிலை ஜப்பான் நிர்மாணித்தது. அவ்வாறு தனது இரும்புத் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டதுடன் நில்லாது, உலக நாடுகள் அஞ்சியும் வெட்கியும் தலை குனியும் வகையில், அவைகளுடன் உருக்கு இரும்புப் பொருட்களில், உலகச் சந்தையில் போட்டியும் போடத் தொடங்கியது.

நிலக்கரி இல்லையே, இரும்புக் கனிப்பொருள் இல்லையே என்று ஏங்கிக்கிடக்காது, இவ்விரண்டு பொருட்களையும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, தனது நாட்டில் பலப்பல கனரகத் தொழில்களை ஜப்பான் உருவாக்கியது. தனது இயந்திரச் சாலைகளில் உருவாக்கிய பல்வேறு இயந்திரங்களையும் மிகமிக விலை மலிவில் உலக நாடுகளுக்கு ஜப்பான் விற்பனை செய்தும் வந்தது. இன்றும் கூட, அந்தத் தொழில் முறையிலிருந்து ஜப்பான் வழிவிலகிச் சென்றுவிடவில்லை.

ஆனல் இங்கோ, சேலம் பகுதியில் முதல்தரமான இரும்புக் கனிச் செல்வம் இருந்தும்கூட, அங்கு ஒரு உருக்குத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு வகை தெரியாது நாம ஏங்கிக்கிடக்கிறோம். அதற்குக் கூறப்படும் நிலக்கரி இல்லையே என்ற சமாதானமோ, இங்குள்ள காங்கிரசு ஆளவந்தார்களின் அரசியல் அடிமைத்தனத்தையும், உடன் பிறந்தார் மீது இருந்த தீரவேண்டிய பற்று அறவே அற்றுப்போனத் தன்மையையுமே காட்டுவதாக அமைந்திருக்கிறது.

தமிழகத் தொழில் ஏற்பாட்டிற்கு மட்டுந்தான் இந்த அலட்சியம் என்று எண்ணிடத் தேவையில்லை. ஆந்திர நாட்டு நிலையும் இதுதான்.

அங்கு பெல்லாரிப் பகுதியில் முதல்தரமான இரும்புக் கனிப்பொருள் கிடைப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு உருக்குத் தொழிற்சாலை துவங்கப்பட வேண்டும் எனத் துணிந்து சில ஆந்திரர்கள் ஏற்கனவே கேட்டனர். சேலத்து உருக்குத் தொழிற்சாலைக்குக் கிடைத்த பதிலான நிலக்கரி இல்லை என்ற பதிலைத்தான், ஆந்திரர் கோரிக்கைக்கும் அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் திருவாய்மலர்ந்தருளினர்.

ஆந்திராவில் கிடைக்கப்பெறும் இரும்புக் கனிப் பொருளைத் தோண்டி எடுத்து, தினம் ஒன்றுக்கு இரண்டாயிரம டன் விதம ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. வடநாட்டில் உள்ள உருக்குத் தொழிற்சாலைக்கும், கடல் கடந்து வெளிநாட்டிற்கும் அந்தக் கனிப் பொருள்கள் கடத்தப்பட்டுவருகின்றன. இத்தகைய முக்கிய மூலப் பொருட்கடத்தல் நாள் தவருமல் நடைபெற்று வருகிறது.

"பத்திராசலம் — கோதாவரி பகுதியில் இருமபுக் கனிப் பொருள் ஏராளமாகப் படிந்திருக்கிறது. உருக்குத் தொழிற்சாலை வேண்டும என்ற ஆந்திரர்களின் கோரிக்கை வன்மை மிக்கதாகும்."

இப்படி கூறியுள்ளார், ஆந்திர மாநில கவர்னராக இருந்துவரும் திருவேதி அவர்கள்.

அந்த அளவுடனும் அவர் நின்றுவிடவில்லை.

"இப்படிப் படிந்துள்ள இருமபுக் கனிப் பொருள் குறித்து அறிக்கை ஒன்று இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தீவிரமாக முயற்சிக்கப்பட்டால், இப்பகுதிக்கு ஒரு உருக்குத் தொழிற்சாலை ஏற்பாடு நிறைவேறக்கூடும்என நான் எண்ணுகிறேன்."

மேலும் கவர்னர் கூறியிருப்பதாவது:—

"மூன்ருவது திட்டத்தில் இடம் பெறவில்லையானுலும், நான்காவது திட்டத்திலாவது ஆந்திர பிரதேசத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலை துவங்குவது சாத்தியமாகக்கூடும்."

முதல் திட்டத்திலும் இல்லை —இரண்டாவது திட்டத்திலும் இல்லை, ஆந்திரத்திற்கு உருக்குத் தொழிற்சாலை!

மூன்ருவது திட்டத்திலாவது ஆந்திரத்திற்குக் கிடைக்குமா என்ருல், அதை, தாம நம்பவில்லை என்கிறர் ஆந்திர கவர்னர் திருவேதி!

நான்காவது திட்டத்திலாவது ஆந்திராவிற்கு உருக்குத் தொழிறசாலை கிடைக்கக்கூடும — அதுவும் உறுதியாகக் கூறத் துணிவில்லை கவர்னருக்கு— இழுத்தாற்போல் பேசுகிறர்!

இந்திய அரசாங்கத்தின் தாராள புத்தியால், நேர்மைப் பண்பால், ஆந்திராவிற்குத் தானுக உருக்குத் தொழிற்சாலை ஒன்று கிடைத்துவிடக் கூடுமோ என எந்த அப்பாவி ஆந்திரரும் கருதிவிடக்கூடாது என்பதற்காக, 'தீவிரமாக முயற்சிக்கவேண்டும்' என்றும கவர்னர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் அமைப்பு தெரிந்திருப்பவர்— போக்கு உணர்ந்திருப்பவர்— செயல்பட்டுவரும் நிலை அறிந்திருப்பவர், ஆந்திர கவர்னர்.

அவரே கூறுகிருர் — 'தீவிரமாக' முயற்சித்தால்தான், நாலாவது திட்டத்திலாவது ஆந்திரர்கள் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைப் பெறுவது சாத்தியமாகக்கூடும் என்று.

டில்லி ஆளவந்தார்களின் மனப்பண்பு மட்டுமே தெரிந்திருப்பவராகக் கவர்னர் திருவேதி இருக்கவில்லை.

காங்கிரசு ஆளவந்தார்களுக்குமுன், டில்லியில் கோலோச்சிய ஆங்கில ஏகாதிபத்தியத் துரைமார்களின் மனவளமும், அனுபவவாயிலாகக் கற்றுத் தெளிந்திருப்பவராவார். அவரே கூறுகிருர், 'டில்லி காங்கிரசு ஆளவந்தார்களிடமிருந்து ஆந்திரம உருக்குத் தொழிற்சாலை ஒன்றைப் பெறுவது என்பது, 'தீவிரமா'ன முயற்சிக்குப் பிறகே நிறைவேறக்கூடியது' —என்று.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரும்புக் கனிப்பொருள் படிவமே, நாள் ஒன்றுக்கு இரண்டாயிரம் டன் விதம தோண்டி எடுக்கப்பட்டு ஆந்திர மாநிலத்தை விட்டுக் கடத்தப்பட்டு வருகிறது என்ருல், மேலும அங்கு குண்டூர், நெல்லூர மாவட்டங்களில பல நூற்றுண்டுக்காலத்திற்குப் பயனபடக்கூடிய இருமபுக் கனிப்பொருள் படிந்து கிடக்கிறது என்று புதிய புள்ளி விவரம கிடைத்திருக்கிறது. இது கேட்டு டில்லி பூரிக்கத்தான பூரிக்கும! இருமபுக் கனிப்பொருள் ஏற்றுமதியை, தொடர்ந்து பல்லாண்டு காலத்திற்கு நடத்தி வரலாம என்பதை டில்லி நினைத்துக் கொண்டால், அதற்கு பூரிப்பு ஏற்படாமல் எப்படி இருக்கமுடியும்? ஆனல் ஆந்திரர்களுக்கோ? வெட்கமும வேதனையும அவர்களைத் துளைக்கத்தான் செய்யும!

தமிழகத்தில் வெண்ணெய் இருப்பதுபோன்றே ஆந்திரத்திலும வெண்ணெய் இருக்கிறது! இருந்தாலும நெய்க்குத் தேடி அழும நிலை இரு மொழி மக்களிடத்திலும காணக்கிடக்கிறது!

ரூ. 461 கோடிக்கு

இறக்குமதி லைசென்சுகள்

புதுடில்லி, பிப். 6—

இறக்குமதி வர்த்தகக் கட்டுப்பாட்டு நிலையங்கள், 1956 ஜூலை டிசம்பர் மாதகாலத்தில், மொத்தம ரூ. 461 கோடி மதிப்புக்கு இறக்குமதி லைசென்ஸ் வழங்கியுள்ளனவாம்.

முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்திற்காக, 88 வர்த்தக நிறுவனங்களின் பெயர்கள் இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனவாம்.

மூடிய இரயில் பெட்டி தயாரிப்பு தொழிற்சாலைகள்

புதுடில்லி பிப் 7—

வாணிபப் பொருட்கள் போனற சாமான்களை ஏற்றிச் செல்லும் மூடிய இரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் சென்னை, பீகார், பம்பாய், டில்லி ஆகிய இடங்களில் அமைக்கப்படுமோம்.

அன்னியக் கொடியை ஒழித்தால் போதுமா?

இனவெறிக் கொட்டம் ஒடுங்க வேண்டாமா?

கேப்டவுன், பிப். 6—

தென்னுப்பிரிக்க யூனியனில் இனி யூனியன் ஜாக் (பிரிட்டிஷ்) கொடி அகற்றப்பட்டுவிடுமாம்!

1927-ம் ஆண்டுச் சட்டப்படி, யூனியன் ஜாக் கொடிதான் தென்னுப்பிரிக்காவில் முதல் கொடி; இரண்டாவதாகவே, யூனியன் சர்க்கார் கொடி.

இப்போது யூனியன் ஜாக் கொடியை ஒழித்துவிடவேண்டுமென தனி நபர் மசோதா ஒன்று வருகிறது.

பிரதமர் ஸ்ட்ரீடம், இந்த மசோதாவிற்கு ஆதரவு தரச் சம்மதிப்பதாகக் கூறியிருக்கிறாராம்.

ஸ்ட்ரீடம் சர்க்காரின் இனவெறிக் கொள்கைக்கு ஆளாகி, கொடுமைகள் பல அனுபவிக்கும் வெள்ளையரல்லாத மக்கள் இந்தச் செய்தி கேட்டு, 'அன்னியக் கொடியை அகற்றிவிட்டால் போதுமா? இனவெறிக் கொட்டம் ஒடுக்கவேண்டாமா?'—என்றே கேட்கின்றனர்.

சனநாயகம் ஒழுங்காக நடைபெற!

'ஆரோக்கியமான எதிர்க் கட்சி வேண்டும்'

ஜே. பி. கிருபளானி வற்புறுத்துகிருர்

புதுடில்லி, பிப். 6—

பார்லிமெண்டரி சனநாயகம் ஒழுங்குற நடைபெற, 'ஆரோக்கியமான'—உறுதியான எதிர்க்கட்சி தேவை என்பதை பி. சோ. தலைவர் ஜே. பி. கிருபளானி வற்புறுத்தியிருக்கிருர்.

காவலர்கள்

"இந்த நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்லிமெண்டரி சனநாயகம் அமையப் பெற்றிருக்கிறது; இதன் காவலர்கள், மக்கள்தான். சுதந்திரமாக வாக்களிக்க மக்களுக்கு உரிமை உண்டு.

கருவியே

"மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு கருவிதான், சர்க்கார் என்பது. இந்த அடிப்படை விஷயத்தை மக்கள் உணராவிட்டால்—புரிந்துகொள்ளாவிட்டால் சனநாயக அமைப்பு சரிவர வேலை செய்யாது,"

என்றும், கிருபளானி, இங்கு நடைபெற்ற கூட்டம ஒன்றில பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

தலையிடு

மேலும் பேசுகையில் அவர், தேர்தல்களில், எந்த ஒரு சர்க்காரின் அங்கமும் தலையிடக் கூடாது' என்ருர்.

மந்திரிகளுக்கு

"மந்திரிமார்கள், தங்களுடைய பதவியை தேர்தல் வேலைக்காக உபயோகித்துக்கொள்ளக் கூடாது' என்றும் இடித்துரைத்திருக்கிருர், கிருபளானி.

கேரள மாநிலத்தில் பொதுத் தேர்தல்

405 பேர் போட்டியிடுகின்றனர்

திருவனந்தபுரம், பிப். 6—

கேரள மாநிலத்தில் 125 சட்டசபை இடங்களுக்கு, 5 கட்சிகளைச் சேர்ந்த 405 பேர் போட்டியிடுகின்றனர். இம்மாநிலத்தில் 75 இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்றனர்.

பரம்பிக்குளம் திட்டத் தகராறு

திட்டக் குழுவின் யோசனைக்கு கேரள சர்க்கார் நிபந்தனை

திருவனந்தபுரம், பிப். 6—

பரம்பிக்குளம் திட்டத்தை நிறைவேற்றுவதில் சென்னை—கேரள அரசாங்கங்களிடையே ஏற்பட்டுள்ள கருத்துவேறுமையை நீக்கத் திட்டக்குழு ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறதாம்.

இந்திய சர்க்காரைச் சேர்ந்த சில பிரதம எஞ்சினியர்கள் இது பற்றிய எல்லாப் பிரச்சினைகளையும பரிசிலனை செய்து திட்டக் குழுவிற்குச் சிபாரிசு செய்யலாம என்று இரு மாநில அரசுகளுக்கும் யோசனை கூறப்பட்டிருப்பதாகவும சில நிபந்தனைகளின்மீது இந்த யோசனையை கேரள அரசாங்கம ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற இத்திட்டம் நிறைவேறிஞல் மொத்தம் 2 இலட்சம் ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி கிடைக்குமாம்.

எஞ்சினியர்கள் அறிக்கை, கேரள மாநில சர்க்காரைக் கட்டுப்படுத்துவதாக இருக்கக்கூடாதென்றும், அறிக்கைமீது முடிவு செய்யும் உரிமை கேரள சர்க்காருக்கே இருக்க வேண்டுமென்றும் திட்டக் குழுவுக்கு கேரள சர்க்கார் தெரிவித்திருக்கிறதாம்.

விடுமுறை நாட்களில்கூட சாமான்கள் ஏற்றுமதி

புதுடில்லி, பிப். 6—

ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்ற விடுமுறை நாட்களிலும் கூட, இரயில் மூலம் அனுப்பப்படும் சாமான்களை ஏற்றுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாம். இந்த முறைக்கு வர்த்தக சங்கங்கள் ஆதரவு தருவதாகவும் கூறப்படுகிறது.

தேர்தலும் அமைச்சர்களும்!

சென்னை, பிப். 5—

சென்னை அரசாங்க அமைச்சர்களில் பரமேசுவரனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் போட்டியிடுகின்றனர்.

இராமநாதபுரம் இராசா காங்கிரஸ் டிக்கெட் கிடைக்காததால் சுயேச்சையாகப் போட்டியிடுகிருர்; ஆனல் அவரை எதிர்த்துக் காங்கிரஸ் போட்டியிடவில்லை.

மத்திய நிதி மந்திரி டி. டி. கே. தென்சென்னைத் தொகுதியில் மக்கள் சபைக்கு தி. மு. கழக அபேட்சகர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களை எதிர்த்துப் போட்டியிடுகிருர்.

மத்திய இரயில்வே அமைச்சர் ஓ. வி. அழகேசன் தி. மு. கழக ஆதரவு பெற்ற டாக்டர் வி. கிருஷ்ணசாமியை எதிர்த்துப் போட்டியிடுகிருர்.

மத்திய உதவி சுகாதார அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன் தி. மு. கழக ஆதரவு பெற்ற ஏ. ன் சிவராஜ் அவர்களை எதிர்த்துப் போட்டியிடுகிருர்.

★

பெண்களும்போட்டியிடுகின்றனர்

சென்னை, பிப் 6—

சென்னை மாநிலத்தில் சென்னை சட்டசபைக்கு 19 இடங்களிலும், டில்லி மக்கள் சபைக்கு 4 இடங்களிலும் பெண்கள் போட்டியிடுகின்றனர்.

180000 'அம்பர் சர்க்கா' உற்பத்தி

இந்தியப் பேரரசிடம் ரூ. 17½ கோடி உதவி கேட்கப்படுமாம்

1957–58ம் ஆண்டில், 1,80,000 அம்பர் சர்க்காக்களுக்குக் குறையாமல் உற்பத்தி செய்வதென அகில இந்திய கதர், கிராமக் கைத் தொழில் போர்டு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இதற்காக அரசாங்கத்திடம் மொத்தம் ரூ. 17½ கோடி உதவி கேட்கவும் அக்குழு முடிவு செய்திருக்கிறதாம்.

எல்லைத் தகராறு

தேர்தல் முடியும்வரை காத்திருக்கலாமாம்

ஆந்திர முதல்வர் கருத்து

மீனம்பாக்கம், பிப். 6—

'தேர்தல்கள் முடியும்வரையில் எல்லைத் தகராறுகள் போன்றவை ஒத்திப் போடப்பட வேண்டும்'

என்று, ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவ ரெட்டி கூறியிருக்கிறார்.

'எல்லோரும் தேர்தலில் ஈடுபட்டிருக்கிறார்கள்; எனவே, எல்லைத் தகராறு இப்போது கவனிக்கப்பட முடியாது,' என்றும் அவர் கூறியிருக்கிறார்

'இதுபோன்ற சிறு பிரச்சினைகள், எப்போது வேண்டுமானாலும் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டியவை; இவை பற்றி அவசரப்படத் தேவை இல்லை' என்றும் அவர் கூறினாராம்.

தி. மு. கழகத் தேர்தல் நிதி

காஞ்சீபுரம் கழகத் தோழர்கள் காணிக்கை

காஞ்சீபுரம், பிப். 5—

காஞ்சிபுரம் 'திராவிட நாடு' பொறுப்பாளர் திரு ஈழத்தடிகள் மூலமாகவும், காஞ்சி நகரச் செயலாளர் தோழர் வெங்கடேசன் மூலமாகவும் தி. மு. கழகத் தேர்தல் நிதி வசூலிக்கப்பட்டுள்ளது. அந்நிதி விவரம் கீழே தரப்பட்டிருக்கின்றன:—

பிளுக்கு தோழர் கருப்பையாவும் அவரது நண்பர்களும் ரூ. 46; கே டி எஸ். மணி ரூ 10; சி எஸ் பூஞ்சோலை ரூ 10; வெ. சம்பந்தம் ரூ. 10; மா. கி தசரதன் ரூ 10; வி. பரமசிவம் ரூ. 10; ஈ சிவக்கியானம், மு. சுப்பிரமணியம் ஆகியோர் ரூ 10; எம். கே நரசிம்மன் ரூ. 10; ஏ விசுவநாதன் ரூ 10; வி. ஏன். பெருமாள் (ந. ச தலைவர்) ரூ. 10; புதுப்பாளையத் தெரு தி மு. கழகத் தோழர்கள் ரூ. 25; சூராணம் மு. ஆறுமுகம் ரூ 5; வி. கோவிந்தராசுலு ரூ. 1; சி. வி. எம். அண்ணாமலை, இரா. வெங்கடேசன், செ சடையாண்டி, எம். கணபதி, டி. சீனுவாசன், மா நாராயணசாமி, சி. ஜி. செயவேல் ஆகியோர் தலைக்கு ரூ 10 வீதம் தந்துள்ளனர்.

* * *

சுருட்டுத் தொழிலாளர்கள் தந்த காணிக்கை

சென்னை 'கௌரி' சுருட்டுக் கம்பெனி பாக்கில் பகுதித் தொழிலாளர்கள் சார்பாகத் தோழர் ப. துரைசாமி மூலம் ரூ. 4—12—3ம், 'கௌரி சுருட்டு'க் கம்பெனி தொழிலாளர் தோழர் ந. சுப்பராயன் அவர்கள் ரூ. 5—8—0ம், 'சாவி மார்க்' சுருட்டுத் தொழிலாளர்கள் சார்பாக தோழர் சே வரதன் மூலம் ரூ. 4—12—0ம் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென அளிக்கப்பட்டது.

* * *

சென்னை வள்ளுவர் மன்ற அன்பளிப்பு

சென்னை பூங்கா நகர் வள்ளுவர் மன்றச் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 50 தரப்பட்டது.

டில்லி அரசு தென்னாட்டிற்கு

அநீதி! இழைக்கிறது! அக்கிரமம்! புரிகிறது! ஓரவஞ்சனை! செய்கிறது!

என்று முழங்குகிறது

தி. மு. க.

★

ரூர்கேலா, பிலாய், துர்காபூர் உருக்குத் தொழிற்சாலைகள், சிந்திரி உர உற்பத்தி, சித்தரஞ்சன் எஞ்சின், பிம்பிரி பெனிசிலின் தொழிற்சாலைகள், பக்ரா—நங்கல்—ஹிராகுட்—தாமோதர்—கோசி—கொய்னு ஆகிய பலநோக்கு அணைக்கட்டுகள், மின் உற்பத்தி நிலையங்கள், போபால் கன மின்சாரச் சாதனங்கள், அம்பர்நாத் இயந்திரக் கருவிகள், உற்பத்தித் தொழிற்சாலைகள்.

இவையும் இவைபோன்ற பலவும்

வடநாட்டில்! பலகோடி ரூபாய் செலவில்!

இல்லை என்பார் எவர்?

★

தென்னாட்டில்...!

"இந்தியாவின் தென்பகுதி (தென்னாடு) தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிறது. எனவே, எங்கள் உதவி பெறுவதில், அப்பகுதியே முதலிடம் பெற வேண்டும். சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவ கடனும் உதவியும் தருகிறோம்."

—ரஷ்யத் தலைவர்களான புல்கானின், குருஷ்சேவ் 1955-ம் வருட இறுதியில், இந்தியா வந்து திரும்பியதும், ரஷ்யாவிலிருந்து டில்லி சர்க்காருக்குத் தெரிவித்த உதவித் திட்டம்; சென்னை ஆங்கில தினசரி 'மெயில்' 21-1-56 இதழ் செய்தி.

"இந்தியா முழுவதிலுமாகத் தொழிலபிவிருத்திக்குச் செலவிடப்பட்டுள்ள பணம், நபர் ஒன்றுக்கு ரூ. 27 வீதம் ஆகும்; ஆனால் சென்னை மாநிலத்தில் செலவிடப்பட்டுள்ளதோ, நபர் ஒன்றுக்கு ரூ. 19-தான். தேசிய விகிதத்தைப்போல, ஐந்து, ஆறு மடங்கு பம்பாய், வங்கம் போன்ற (வட நாட்டுப்) பிரதேசங்களில் செலவிடப்பட்டிருக்கிறது."

—சி. டி தேஷ்முக்: 1956 ஜூலையில் உதவைக்கு வந்திருந்தபோது.

"பம்பாய்க்குத் தெற்கே, தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டதில் சமநீதி இருக்கவில்லை; பெரும் பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது.

'இந்த அநீதியைத் தொடர்ந்து இழைப்பதாக உள்ளது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்"

—அனுமந்தையா: மைசூர் முதலமைச்சராக இருந்தபோது 2—5—56 அன்று, புதுடில்லியில் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் பேசியது.

"பெரிய பெரிய தொழிற்சாலைகளும் வேலைத் திட்டங்களும் உருவாவதில் இந்த மாநிலத்திற்கு உரிய பங்கு தரப்படவில்லை என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்."

—அம்புஜம்மாள்: 1955 ஜனவரி 21-ல் ஆவடி மாநாட்டு வரவேற்புரையில்.

"தென்னாடு தொழில் துறையில் மிகப் பின்தங்கிக்கிடக்கிறது என்பது வெறும் பிரச்சாரத்திற்காகச் சொல்லப்படும் கோஷம்—சுலோகம் அல்ல; மாறாக, மத்திய நிதி அமைச்சரே ஒப்புக்கொண்டுள்ள உண்மையாகும்."

—சி. சுப்பிரமணியம்: 7—7—56-ல் தூத்துக்குடி உருக்கு வர்த்தகர் மாநாட்டில்.

"தென்னாட்டை மத்திய சர்க்கார் புறக்கணித்தே வருகிறது. தென்னாடு முன்னேற வேண்டுமென்பதில் டில்லி சிறிதும் அக்கரை காட்டுவதில்லை."

—ஏ எம். தாமஸ் எம். பி.: 4—4—55-ல் மக்கள் சபையில்.

"தொழிலபிவிருத்தித் துறையில் தென்னாடு படுமோசமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது."

—அனந்தராமகிருஷ்ணன்: 10—12—56ல் திருச்சியில்.

"விந்தியத்திற்குத் தெற்கில் தொழில் நிர்மாணத்திற்கு எந்த ஒரு பகுதியும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது கண்டிக்கத்தக்குரியதாகும்; எனக்கு ஆழ்ந்த ஏமாற்றத்தைத் தருகிறது."

—சர். சி. பி இராமசாமி அய்யர்: 16-4-56ல் சென்னையில்.

"தென்னாடு தொழிலபிவிருத்தியில் அலட்சியப் படுத்தப்படுகிறது."

—டி. எஸ். இராஜம்: 20—7—56-ல் மதுரைக் கூட்டத்தில்.

"தொழில் துறையில் தென்னாட்டிற்கு டில்லி இழைத்துவரும் ஓரவஞ்சனை இனியும் நீடிக்குமானால், இந்திய யூனியனிலிருந்து தென்னாடு பிரிந்துபோக வேண்டிவரும் என்று இந்தச் சபையில் எச்சரிக்கிறேன்."

—ஸ்ரீகண்டன் நாயர் எம். பி. (காங்): 4—9—56-ல் மக்கள் சபையில்.

"அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது."

—முகமது இஸ்மாயில் (முஸ்லீம் லீக் தலைவர்): 3—9—56-ல் டில்லி மாநிலங்கள் சபையில்.

"இந்தியப் பேரரசு இரக்கமற்று ஓரவஞ்சனையாக நடந்துகொள்கிறது. தென்னாடு வேண்டுமென்றே அலட்சியப்படுத்தப் பட்டுள்ளது."

—பி. பி நாயர் எம். பி.: 18—4—56-ல் மக்கள் சபையில்.

"தென்னாட்டு மக்களின் ஆசைகளையும் தேவைகளையும் வடக்கிலிருக்கும் சர்க்கார் அலட்சியப்படுத்துகிறது."

—ஐ. முகமது இமாம்: மைசூர் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர்—4—4—55-ல்.

ஏதுமில்லை — ஏமாற்றமே!

என்கின்றனர் இவர்கள் எல்லாம்!

★

இந்த அநீதி அழிய — அக்கிரமம் ஒழிய

உங்கள் வாக்கு

தி. மு. க. அபேட்சகர்களுக்கே!

****

தென்னகத்தின் நிலவளம்

மற்றுமோர் புதிய கண்டுபிடிப்பு!

புதுடில்லி, பிப். 7—

நாட்டின் கனிப் பொருள் செல்வத்தைக் கண்டறிய மத்திய அரசாங்கம் நடத்திய ஆராய்ச்சியில், ஆந்திர மாநிலத்தில் குண்டூர், நெல்லூர் மாவட்டப் பகுதிகளில் ஏராளமான இரும்புக் கனி கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பல நூற்றாண்டுக்காலத்திற்குப் பயன்படும் வகையில் இச்சுரங்கங்களிலிருந்து சுமார் 39 00,00,000 டன் இரும்புக் கனியைத் தோண்டி எடுக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் சில நாட்களுக்கு முன்னர்தான், 'இம்மாவட்டங்களில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் காணப்படுகின்றன — தேவையான — விரிவான ஆராய்ச்சிகள் நடத்தினால் பெரும் அளவில் இப்படிவங்கள் காணப்படுவது சாத்தியமாகும்' என்று, இதே 'நில சர்வே' குழுவினர் வெளியிட்டிருந்த செய்தி இங்கு மீண்டும் நினைவிற்கொள்ளத்தக்கது.

சென்னைக்கு 50 இயந்திரங்களாம்!

சென்னை, பிப். 6—

வடநாட்டில் கோதுமையை உணவாகக்கொண்டுள்ள பகுதிகளில், மாவு அரைப்பதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றனவாம். அதுபோலவே, சென்னை மாநிலத்தில் உள்ள கிராமங்களில் கேழ்வரகு மாவு தயாரிப்பதற்கு ஒரு புதிய மாவு அரைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு சென்னை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி சுமார் 50 இயந்திரங்கள்வரை மாநிலத்தில் கேழ்வரகு விளையும் பகுதிகளில் பரிசிலைக்குத் தரப்படுமாம். இதற்கான பண உதவி தர, இந்தியக் கதர், கிராம கைத்தொழில் நிறுவனச் சிபாரிசை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளதாம்.

அரியலூர் இரயில் விபத்து

திருச்சியில் 9 நஷ்டஈடு கோரிக்கைகள்

திருச்சி, பிப். 6—

அரியலூர் இரயில் விபத்தில் இறந்தோர் குடும்பத்தவருக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கென சர்க்காரால் நியமிக்கப்பட்ட நஷ்டஈடுக் குழு தலைவர் திரு. வி. இரத்தினம், கடந்த மூன்று நாட்களாகத் திருச்சியில் தங்கியிருந்து மொத்தம் 27 கோரிக்கைகள் பற்றி விசாரணை நடத்தினதில், 9 கோரிக்கைகளுக்கு மட்டும் நஷ்டஈடு கொடுக்க அனுமதியளித்துள்ளார் எனத் தெரிகிறது.

இதுவரை சர்க்காருக்குக்கிடைத்துள்ள 150 நஷ்டஈடு கோரிக்கைகளில் சுமார் 60 கோரிக்கைகள் ஆராயப்பட்டதாகவும், மொத்தமாக இதுவரை சுமார் ரூ. 1 இலட்சம் நஷ்டஈடாகக் கொடுக்கப்பட்டுள்ளதென்றும் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

இந்தியா—சப்பான் ஒப்பந்தம்

பம்பாய், பிப். 6—

சப்பானிடமிருந்து ரூ. 85 இலட்சம் பெறுமானமுள்ள 30 இலட்சம் ராத்தலுக்கு அதிகமான ரேயான் பட்டுநூல் வாங்க, இந்திய செயற்கைப்பட்டு தொழிலதிபர்கள் சங்கம் ஒப்பந்தம் செய்துள்ளதாம்.

காமராசர் ஆட்சியின் அலங்கோலம்

கள்ளத் தோணியில் ஏறி கடலில் விழுந்து சாகின்றனர் தமிழர்!

சென்னை, பிப். 7—

கள்ளத் தோணி மூலமாகத் தென்னாட்டிலிருந்து சிலர் இலங்கைத் தீவிற்குச் செல்லும்போது வழியில், பாறைகளில் மோதியதின் விளைவாகத் தோணியும் உடைந்து, அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்கள் சிலர் பரிதாபகரமான மரணத்தை அடைந்திருக்கின்றனர்.

இந்தப் பரிதாபச் சம்பவத்தில் இரண்டு பேருடைய பிணங்கள் கிடைத்துள்ளனவென்றும், மற்றும் கடலில் நீந்திச் சென்று இலங்கைக் கரையைச் சேர்ந்த பத்துப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், உடைந்த தோணியின் சில எஞ்சிய பகுதிகள் கைப்பற்றப் பட்டுள்ளன என்றும், இலங்கைப் போலீஸ் அதிகாரிகள், சென்னையிலுள்ள குடியமைப்பு அதிகாரிக்குத் தகவல் தந்திருக்கின்றனராம்.

இந்த அபாயத்திற்கு உள்ளான தோணி, தென்னாட்டுக் கடற்கரையோரப் பகுதிகளில் எங்காவது ஒரு இடத்திலிருந்து புறப்பட்டிருக்கலாம் என்றும், ஆனால் அது என்றைக்குப் புறப்பட்டது, அதில் எத்தனை பேர் பிரயாணம் செய்தனர் என்பது பற்றியத் திட்டமான தகவல்கள் தர இயலாது என்றும் சென்னை அதிகாரி அறிவித்திருக்கிறாராம்.

மேலும், இவர்களில், நீந்திச் செல்ல இயலாதவர்கள் எதிர்ச் சென்றிருந்தால் அவர்களும் நீரில் மூழ்கியிருக்கலாம் எனத் தாம் நம்புவதாகவும், அப்படி யாரேனும் மூழ்கியிருந்தால் அவர்களைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளை இலங்கைப் போலீசார் தீவிரமாக மேற்கொண்டுள்ளனர் என்றும் அறிவித்துள்ளாராம்.

இனிமேல் இதுபோல் கள்ளத்தனமாகச் செல்வோரைக் கண்டுபிடிக்க போலீசார் தீவிரமாக முயற்சிப்பதெனவும்; அதற்கென, தென்னாட்டின் கடற்கரையோரங்களில் எல்லாம் பலத்தப் போலீஸ் கண்காணிப்புகளையும், காவலையும் ஏற்படுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புயலால் பாதிக்கப்பட்ட

மீனவர்களுக்கு மாபெரும் உதவி!

சென்னை, பிப். 6—

1956-ல், சென்னை அத்தக்குடி, மேட்டூர் அணைப்பகுதிகளில் உள்ள 6 மீனவர் சங்கங்களுக்கு ரூ. 1 இலட்சம் வரை நீண்டகாலக் கடனுதவியளித்துள்ளனராம், மாநில சர்க்கார்!

மற்றும் ரூ. 1 இலட்சத்திற்கான கடன் விண்ணப்பங்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றனவாம்.

சமார் ரூ. 20,000 மதிப்புள்ள 97 கட்டுமரக்கட்டைகள் இலங்கையிலிருந்து வந்துள்ளனவென்றும் அடுத்த திங்களில் மேலும் 300 கட்டைகள் வருமென்றும், இவைகள் புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் வாழும் மீனவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

மேலும் 1,50,000 பேல் பருத்தி ஏற்றுமதி

பம்பாய், பிப். 6—

ஏற்றுமதிக்கென மேற்கொண்டும் 1,50,000 பேல்கள் இந்தியப் பருத்திக் 'கோட்டா'வை அனுமதிப்பதென இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினை சிக்கலாகிவிட்டதாம்!

பண்டிதர் கூறும் காரணம்

இலக்குமணபுரி, பிப் 7—

"பாகிஸ்தானில் அமெரிக்க இராணுவத் தளவாடங்கள் குவிக்கப்பட்டிருப்பதாலும், பாகிஸ்தான் வசம் உள்ள காஷ்மீர் பகுதியில் இராணுவப் பலம் அதிகரிக்கப் படுவதாலும், ஐ. நா. பாதுகாப்புக் குழுவின் தீர்மானத்தின் காரணமாகவும், காஷ்மீர் பிரச்சினை தற்போது மிகவும் சிக்கலாகிவிட்டிருக்கிறது; கவலைக்கிடமளிப்பதாக இருக்கிறது," என்று, பண்டித நேரு கூறியிருக்கிறார்.

பண்டிதருக்கு பண்டார உபதேசம் செய்வாராம்!

கொழும்பு, பிப். 7—

காஷ்மீர் தகராறை சுமூகமாகத் தீர்த்துக்கொள்ளுமாறு இந்தியா—பாகிஸ்தான் சர்க்கார்களுக்கு தான் கடிதம் எழுதப்போவதாகவும், அத்துடன் பாண்டுங் நாடுகளும், தங்கள் செல்வாக்கினை உபயோகித்து அமைதியானதோர் பரிகாரம் தேடுமாறு கேட்க விருப்பதாகவும் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியிருக்கிறார்.

சீனப் பிரதமரான சௌ-என்-லாயும் இதுபோலவே கடிதம் எழுதலாம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'விரும்பாவிடில் வெளியேறுவோம்'

பண்டிதர் கூறுகிறார்

அலகாபாத், பிப். 6—

அலகாபாத் பொதுக்கூட்டத்தில் பண்டித நேரு பேசுகையில், கூட்டத்தில் 'காஷ்மீர் இந்தியாவுக்கே' என்று மக்கள் முழங்கினராம்.

உடனே பண்டித நேரு, 'காஷ்மீர் நம்முடையதல்ல — காஷ்மீர மக்களின் விருப்பமில்லாமல் ஒரு வினாடிகூட நாம் காஷ்மீரில் இருக்க முடியாது," என்று குறிப்பிட்டதாகச் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

சொந்த விவகாரம் அல்லவாம்!

லக்னோ, பிப். 7—

"ஒரு காலத்தில் நான் காஷ்மீரைச் சேர்ந்தவன் என்பதினால்தான் நான் காஷ்மீர் விவகாரத்தில் அதிக அக்கரை காட்டுவதாகச் சிலர் கூறுகிறார்கள்; இது உண்மையல்ல. எங்கள் குடும்பம் காஷ்மீரைவிட்டு வந்து 250 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இது, காஷ்மீர் மக்களைப் பொறுத்த ஒரு விவகாரம்"

என்று பண்டிதர், கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினாராம்.

தழை உர விதைகள் விநியோகக் காலம் நீடிப்பு

சென்னை, பிப் 8—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்கு தழைச்செடிகள் விதை விநியோகிக்கும் திட்டத்தை நீடிக்குமாறு சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாம்.

1958—ம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய தழைச்செடி விதைகளுக்காக 20 சதவிகிதம் அரசாங்கத்தின் சகாயமாக கிடைக்கும்.

- ****************-*

சென்னை மாவட்டக்

கிளைக் கழகத் தோழர்களுக்கு:

★

மாபெரும் ஊர்வலம்

"10—2—57 ஞாயிறன்று நடைபெற இருக்கும் தி மு கழக தேர்தல் பிரச்சார மாநாட்டை ஒட்டி காலை 7-30 மணியளவில், இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாகச்சென்று மாநாட்டுத் திடலை அடையும்.

"கிளைக் கழகத் தோழர்களும், சார்புடைய மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தோழர்களும் கழகக் கொடிகளுடன் ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்; காலை 7 மணிக்கே 'அறிவகம்' வந்து சேரவேண்டுகிறேன்."

என்று, சென்னை மாவட்டத் தி. மு. கழகத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

*******-*******-****

காஞ்சி தொகுதியில் அண்ணா

★

பிப்ரவரி

9: மாலை 6-மணி—காஞ்சிபுரம் காளியம்மன் கோவில் தெரு (அரங்கசாமி நினைவு மன்றம்)

" இரவு 10-மணி—காஞ்சிபுரம் கரிக்கினில் அமர்ந்தவன் கோயில் தெரு

11: மாலை — சின்ன காஞ்சிபுரம், திருச்சோலைத் தெரு, திருவள்ளுவர் கழகம்.

(10-2-57 சென்னை சிறப்பு மாநாடு)

தேர்தல் பிரச்சாரத்திலா அபாய அறிவிப்பு?

இலக்குமணபுரி, பிப். 8—

"உலகம் மீண்டும் நெருக்கடியான நிலையைக் கடந்துகொண்டிருக்கிறது; எங்கிருந்தாகிலும் ஒரு பொறி தெறித்தாலும் அது காட்டுத் தீபோல் மாறி விடுவதற்கான அபாயம் இருக்கிறது" என்று பண்டித நேரு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளார்.

பொருட்படுத்தவில்லை!

சப்பான் கண்டனத்தையும் பொருட்படுத்தாமல் பிரிட்டன் பசிபிக் கடலில் அணு ஆயுதங்கள் சோதனையை தொடர்ந்து நடத்தும் என்று பிரிட்டன் தெளிவாகத் தெரிவித்துவிட்டதாம்.

சென்னை வள்ளுவர் மன்ற ஆண்டு விழா

9—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை 31-வது வட்டம் வரதராசபுரம் வள்ளுவர் மன்ற 4-வது ஆண்டுத் துவக்க விழாப் பொதுக் கூட்டம், எழும்பூர் ஐன் பாக்டரிக்கு அருகிலுள்ள சுப்பன் இடலில் தோழர் சி. கே. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, டி. எம். அகஸ்டின் பேசுவர். தோழர் அ பொ. அரசு எம்சி, பரிசு வழங்குவார்.

சென்னை 7-வது வட்டத்தில் தேர்தல் பிரச்சார ஊர்வலம்

9—2—57 சனி மாலை 6-மணிக்கு மூலக்கொத்தளம் அடுத்த பெரியபாளையத்தம்மன் கோயில் வீதியிலுள்ள அழகிரி மன்ற அலுவலகத்திலிருந்து, தி. மு. கழக அபேட்சகர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்துத் தேர்தல் பிரச்சார ஊர்வலம் புறப்பட்டு 7-வது வட்டத்தின் எல்லாத் தெருக்களிலும் வலம் வந்து முடிவுறும். தோழர் என். வி. நடராசன் அவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொள்வார். அனைவரும் பெருந்திரளாக வரவேண்டுகிறோம்.

கோபி தொகுதியில்

தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டங்கள்

11—2—57 மாலை 6-மணிக்கு வளவாசியிலும், இரவு 8-மணிக்கு குஞ்சாண்டியூரிலும், 12—2—57 மாலை 6-மணிக்கு காவேரிபுரத்திலும் தி மு. கழக தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் தொகுதி அபேட்சகர்கள் தோழர்கள் க. கு சின்னசாமி, ஜி என். இராசு ஆகியோர் கலந்து கொள்வர்.

சென்னை—17-வது வட்டத் தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

9—2—57 இரவு 7 மணிக்கு, சென்னை - சூளை, எண். 4 நரசிங்க பெருமாள் கோவில் தெரு இல்லத்தில் 17-வது வட்டத் தி மு. கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் நடைபெறும் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் குழு அமைப்புக் கூட்டம்

8-2-57 இரவு 8 மணிக்கு. சென்னை — நுங்கம்பாக்கம் எண் 8 சி/29 இராமநாய்க்கன் தெரு, மக்கள் மகிழ்ச்சி மன்றத்தில், தி. மு. கழகத் தேர்தல் குழு அமைப்புக்கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்து கொள்வார். 34-வது வட்ட கிளைக் கழகம், சார்பு மன்றங்கள், நிறுவனங்களைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

'உதய சூரியன்'—நாடகம்

10-2-57 இரவு 9 மணிக்கு, மேலக்காட்டூர், அண்ணா அரங்கில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக தோழர் பொ. தருமன் தலைமையில் முத்தமிழ் நாடக மன்றத்தினரின் 'உதய சூரியன்' நாடகம் நடைபெறும்.

கால்கோள் விழா

10-2-57 காலை 9 மணிக்கு, சென்னை—தியாகராய நகர் அபிபுல்லாரோடு கிழக்குக் கோடியிலுள்ள (சன் தியேட்டர் அருகில்) தென்னிந்திய நடிகர் சங்க மனையில், மேற்படி சங்கக் கட்டிடத்தின் கால்கோள் விழா நடைபெறும். திரு. எஸ். எஸ். வாசன் விழாவை நடத்திவைப்பார்.

திருத்தம்

சென்னை 4—2—57 (வெளியூர் 5—2—57) 'நம் நாடு' இதழில் 'பெரம்பூர் தொகுதி தோழர்கட்கு' என்ற செய்தியில், தோழியர் சத்தியவாணி முத்து அவர்களுடன் தேர்தல் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள விரும்புவோர், எண். 13 பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, (திரு வி. க. திடல் அருகில்)' என்றிருப்பதை 'எண். 123, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு (திரு வி க. திடல் அருகில்)' எனத் திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(ஆ—ர்.)

தொகுதிக் குழுக் கூட்டங்கள்

★

வேலூர்:

10—2—57 அன்று வேலூர் தி. மு கழக அலுவலகத்தில் வேலூர் தொகுதி பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தோழர் கண்ணதாசன் தேர்தலும் உறுப்பினர்கள் கடமையும்' எனும் பொருள் குறித்துப் பேசுவார். கழக உறுப்பினர்களும் ஏனைய தோழர்களும் கலந்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

மேலூர்:

8—2—57 மாலை 3-மணிக்கு சமயநல்லூரில், மேலூர் தொகுதி தி மு கழக ஊழியர் கூட்டம் தோழர் எஸ் முத்து தலைமையில் நடைபெறும். வட்டத்தோழர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள்

★

பூவிருந்தமல்லி:

10—2—57 மாலை, பூவிருந்தமல்லி கண்டோன்மெண்டில் தோழர் டி இராசரத்தினம் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி கே சீனிவாசன், சி வி எம். அண்ணாமலை தி. ந சம்பந்தம், க இளஞ்செழியன் ஆகியோர் பேசுவர்.

வேலூர்:

10—2—57 மாலை 6½ மணிக்கு, வேலூர் பாரக்ஸ் மைதானத்தில் தோழர் வி எம். தேவராஜ் தலைமையில் நடைபெறும் தி மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை—வண்ணை:

9—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை பழைய ஆட்டுத் தொட்டி (3-வது வட்டம்)யில் தோழர் பி. சண்முகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், என். ஜீவரத்தினம், எஸ். கே. வீரமணி, பி. கே. மூர்த்தி, பி. எம். கருணாகரன், எழில்மதியன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

மாணவ மன்றத் தேர்வுகள்

9—2—57-ல் சென்னை மாநில மெங்குமுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகள் கல்லூரி மாணவர்களுக்கான சென்னை மாணவர் மன்றத் தமிழ்த் தேர்வுகள் நடைபெறும்.

திருமணங்கள்

10—2—57 காலை 7-மணிக்கு பெரிய காஞ்சீபுரம் பெருமாள் நாயகர் தெரு, எண் 2. இல்லத்தில் தோழர் இரா வெங்கடேசன் தலைமையில் தோழர் இ ஆறுமுகம்—தோழியர் மீனாட்சி திருமணம் நடைபெறும் அண்ணா அவர்களும், தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களும் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

10—2—57 காலை 7-மணிக்கு சென்னை—கீழ்ப்பாக்கம் ஆர்ம்ஸ் ரோடு, எண் 22 இல்லத்தில், தோழர் எம். புருஷோத்தமன்—தோழியர் ஜி. மோகனாம்பிகை திருமணம் திரு வி பி எஸ். மணியம் தலைமையில் நடைபெறும் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் வாழ்த்துரை வழங்குவார்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, ஆதியப்ப நாயக்கன் செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.